மதுரை மாநகரின் பெயர்க்காரணம்

இக்காலத்தில் வீடுகள், சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகளுடன் திட்டமிட்டு உருவாக்கப்படும் நகரங்களைப் போன்று, வாஸ்து இலக்கணப்படி மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பழமையான நகரம் மதுரை ஆகும். சிவலிங்கத்தை மையப்படுத்திக் கோயிலும் வீதிகளும் நகரமும் கோட்டையும் அகழியும் எனச் சிறப்பாகத் திட்டமிட்டப்பட்டுக் **குலசேகர பாண்டிய மன்னனால்** உருவாக்கப் பெற்ற நகரம் மதுரை ஆகும். திருவிளையாடல் புராணத் தரவுகளின் அடிப்படையில் மதுரை மாநகரின் பெயர்க்காரணத்தையும், அதன் சிறப்புப் பெயர்களுக்கான விளக்கங்களையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.



மதுரையின் சிறப்புப் பெயர்களும் காரணங்களும்

மதுரை நகருக்குக் கடம்பவனம், ஆலவாய், நான்மாடக்கூடல், வெள்ளியம்பலம், தூங்காநகர் என்று பல சிறப்புப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவற்றில் சில முக்கியப் பெயர்களுக்கான காரணங்கள் பின்வருமாறு:


- **மதுராநகர்:** சிவபெருமான் தமது சடையில் சூடிய பிறைச்சந்திரனிலிருந்து அமிர்தமாகிய மதுவைத் தெளித்து, நாகம் உமிழ்ந்த விஷத்தை நீக்கிப் புனிதமாக்கியதால் இந்நகரம் 'மதுராநகர்' எனப் பெயர் பெற்றது.

- **ஆலவாய்:** சிவபெருமானின் அணிகலன்களில் ஒன்றான பாம்பு, வட்டமாகத் தன் வாலை வாயினால் கவ்விக்கொண்டு இத்தலத்தின் எல்லையைக் காட்டியதால் இத்தலத்திற்கு 'ஆலவாய்' என்ற பெயர் ஏற்பட்டது.

- **நான்மாடக்கூடல்:** மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களைத் தடுக்கும் பொருட்டு, சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்ததால் 'நான்மாடக்கூடல்' என்ற பெயர் உண்டானது.

- மலைகள் சந்திக்கின்ற மலைகளின் மையத்தில் மதுரை மாநகரம் உள்ளது.
  மதுரை மாநகரின் மையமாக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் உள்ளது.
  கோயிலின் மையமாகச் சுயம்புலிங்கம் உள்ளது.

மதுரை: இயற்கையாய் அமைந்த இறைவனின் இருப்பிடம்



- மதுரை மாநகரம் என்பது வெறும் கட்டிடங்களால் ஆன நகரம் மட்டுமல்ல; அது இயற்கையின் பேராற்றலும், தமிழரின் நுட்பமான அறிவியலும், இறைவனின் அருளும் சங்கமிக்கும் ஒரு புனிதத்தலம். மதுரையைச் சுற்றியுள்ள மலைகளின்

அமைப்பை ஆராய்ந்தால், நம் முன்னோர்கள் எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் இந்த நகரைத் திட்டமிட்டுள்ளனர் என்பது புலப்படும்.



இலக்கண அடிப்படையில் 'மதுரை'

'மதுரை' என்ற சொல்லைத் தமிழ் இலக்கணப்படி பிரித்தால் (ம=குறில், து=குறில், ரை=நெடில்) நிரை நேர் (புளிமா) என்ற வாய்பாடு அடிப்படையில் "மது.ர்+ஐ" என்று வரும்.

- **மதுர்** என்றால் 'அழகு நிறைந்த' என்று பொருள்.
- **ஐ** என்றால் 'தலைவன்' என்று பொருள். எனவே, **மதுரை என்பது "அழகிய தலைவன்"** அதாவது **"சுந்தர ஈசுவரன்"** என்று பொருளாகிறது.

சுந்தரேசுவரரின் சாமுத்திரிகா இலட்சணம்

உடலின் அமைப்பை 32 ஆகப் பிரித்துக் கூறும் சாமுத்திரிகா இலக்கண விதியின்படி, இந்த எண் நான்கு (8 x 4 = 32) மேனி இலட்சணங்களும் நேர்த்தியாக அமையப் பெற்ற ஒரே சிவலிங்கம் மதுரை சுந்தரேசுவரர் மட்டுமே என்று பரஞ்சோதி முனிவரால் மொழிபெயர்க்கப்பட்ட திருவிளையாடல் புராணம் கூறுகிறது.



திருக்கேதாரம், காசி உள்ளிட்ட திருப்பதிகளில் இலிங்கங்கள் தோன்றுவதற்கு முன்பே கடம்ப மரத்தினடியில் முளைத்த மூல லிங்கம் இதுவாகும். முப்பத்திரண்டு இலட்சணங்களையுடைய, ஞானவடிவாகிய, முடிவில்லாத அழகுடைய இறைவன் உமையம்மையோடும் இணைந்து அழகு செய்து அருள்பாலிப்பதைத் தேவர்கள் கண்டு வணங்கினர். 32 இலட்சணங்களும் ஒன்றாகப் பொறுந்திய சிவலிங்கம் இது ஒன்றே என்ற காரணத்தினால், இந்தச் சிவலிங்கத்திற்கு அழகிய தலைவன் என்ற பொருளில் **'மதுரை'** என்ற காரணப் பெயர் உண்டானது. இந்தச் சிவலிங்கத்தைச் **'சுந்தர-ஈஸ்வரன்'** என்று தேவர்கள் பெயரிட்டு அழைத்தனர் என்று திருவிளையாடல் புராணத்தின் மூர்த்திவிசேடப் படலம் விளக்குகிறது.

மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில், **மதுரை** என்றால் **"அந்தமில் அழகன்"**, **"அழகியபிரான்"**, **"சுந்தரேசுவரன்"** என்று பொருள்கொள்ள வேண்டும். சுந்தரேசுவரர் என்ற அந்தச் சிவலிங்கத்திற்கான தமிழ்ப்பெயரே, காலப்போக்கில் அந்த ஊருக்கும் ஆகி நிலைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

சுருக்கமாகச் சொன்னால், 32 இலட்சணங்களையும் உடைய அழகிய சிவலிங்கம் இது ஒன்றே காரணத்தினால், தமிழ் இலக்கண விதிகளின்படி "மதுரை" என்ற காரணப் பெயரால் சிவலிங்கம் அழைக்கப்படுகிறது. மதுரை என்ற சிவலிங்கத்தின் பெயரே ஊருக்கும் ஆகியுள்ளது.

மதுரை என்ற மாநகரில் உள்ள மதுரை என்ற சிவலிங்கத்தை வணங்கி வழிபடுவோம். 32 இலட்சணங்களை நாமும் பெற்று, நலமாக வளமுடன் வாழ்வோம்.

அன்பன்
காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,
மேனாள் துணைப் பதிவாளார்,
அழகப்பா பல்கலைக்கழகம்.
ஆராய்ச்சி அமைப்பாளர்,
திருவிளையாடற் புராண ஆராய்ச்சி மையம், மதுரை.
WhatsApp :+91 9443501912
Phone : 8248266418
e-mail : kalairajan26@gmail.com